2025 – ஏப்ரல் மாதம் 01– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 207 / 2024*

*2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 1, ஞானபிரகாசம் |
| தகப்பனார் பெயர் | : | யோகலிங்கம் |
| ஊர் | : | கோவில்பாளையம் |
| வட்டம் | : | குன்னம் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| வயது | : | 56 |

<u>தேதி: 01.04.2025.</u>

<u>முதல் விசாரணை:–</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

<u>**எனது சார்பாக:–**</u>

**1).12/04/2024**–ம் தேதியிட்டு பெரம்பலூர் காவல் நிலைய குற்ற எண் 289/ 2024–ன் கீழ் இதச பிரிவுகள் 279, 337–ன் படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் அதனுடன் சேர்ந்த வேண்டுகோள் கடிதம் உண்மை நகல் **ம.சா.ஆ.1.**

**2).** எனது ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது அது **ம.சா.ஆ.2.**

3). 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச்சான்று நகல் **ம.சா.ஆ.3.**

4). 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன காப்பீடு நகல் **ம.சா.ஆ.4.**

5). பெரம்பலூர் பிரியம் மருத்துவமனையில் நான் சிகிச்சையில் சேர்ந்த போது என் பெயருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு கார்பன் நகல் **ம.சா.ஆ.5.**

6).பெரம்பலூர் பிரியம் மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு வழங்கப்பட்ட காயச்சான்று கார்பன் நகல் **ம.சா.ஆ.6.**

7).பெரம்பலூர் பிரியம் மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட மருத்துவ விடுவிப்பு சான்று நகல் **ம.சா.ஆ.7**, ஆக தாக்கல் செய்கின்றேன்.

எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**குறுக்கு விசாரணை:– (2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து நடந்த இடம் நான்கு வாகனங்கள் செல்லக்கூடிய அளவிற்கு அகலமான ரோடு என்றால் சரிதான். மாலை நேரங்களில் அதிக போக்குவரத்து இருக்கும் என்று சொன்னால் சுமாராக இருக்கும். என் மீது மோதியதாக சொல்லும் வாகனம் எனக்கு பின்னால் வந்து மோதியது என்றால் சரிதான். அதனால் அந்த வாகனம் எவ்வாறு, எப்படி வந்தது என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு பக்கவாட்டுப்பகுதியில் வாகனங்கள் ஏதேனும் சென்று கொண்டிருந்ததா என்றால் இல்லை. பின்னால் வந்த வாகனம் சரியாக தான் வந்தது என்றும், நான் தான் திடீரென்று டிராக் மாறி விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சிக்னல் செய்யாமல் டிராக் மாறியது தான் விபத்திற்கு காரணம் என்று சொன்னால் சரியல்ல. விபத்து ஏற்பட்டவுடன் நான் 3 நாட்கள் மட்டும் தான் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். அதற்கு பிறகு நான் தொடர் சிகிச்சை மேற்கொண்டதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். தற்போதும் நான் பணியில் இருந்து வருகின்றேன் என்றால் சரிதான். விபத்திற்கு முன்பு பெற்ற

ஊதியத்தையே தற்போதும் பெற்று வருகின்றேன் என்றால் சரிதான். எனது ஊதியத்தில் எவ்வித மாறுபாடும் ஏற்படவில்லையென்றால் சரிதான். விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என்றும், முழுமையாக குணமாகி விட்டது என்றும் சொன்னால் சரியல்ல. விபத்தினால் எனக்கு எவ்வித வருமான இழப்போ, உடல் ஊனமோ ஏற்படவில்லையென்றால் சரியல்ல. அதிக இழப்பீடு பெறவேண்டும் என்ற நோக்கில் நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு பின்னால் வந்த வாகனத்தை அதன் உரிமையாளர் தான் ஓட்டி வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லையென்றும், 1–ம் எதிர்மனுதாரரே தெரிந்தே ஓட்டி வந்ததால் அது பாலிசி விதி மீறல் என்பதால் 2–ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் இல்லையென்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும், விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:– இல்லை.</u>**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**